**சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 1973 இன் 18 ஆம் இலக்க சிறைக்கைதிகளின் நலன்புரி நிதிய சட்டத்தின் 7(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்ட ஏற்பாடுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் பிரகாரம் நிதியத்திற்கான வருமான மூலங்களிலிருந்து சேகரிக்கப்படும் பெறுவனவுகளின் நிச்சயமற்ற தன்மை, | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. நிதியத்திற்கான வருமான மூலங்களின் நிச்சயமற்ற தன்மை, | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதியச் செயற்பாடுகளிற்காக அரசாங்கத்திடமிருந்தான பங்களிப்பு காணப்படாமை, போதியளவு நிதிகளுடன் நிதியம் தொழிற்படத் தவறியமை மற்றும் நிதியத்திற்காக பாதீடு தயாரிக்கப்படாமை போன்ற விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான வெளிப்படுத்தல்களின் கீழ் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை வெளிப்படுத்தப்பட முடியாதிருந்தது. | அரசாங்கத்திடமிருந்தான பங்களிப்பு காணப்படாமை போன்ற விடயங்களினால் நிதிய மீதி போதாதுள்ளது. ஆகையால் மீளாய்வாண்டின் செலவினங்களை மேற்கொள்வதற்கு நிதிகள் போதாமை காரணமாக மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் நிதியத்தின் குறிக்கோள்களை ஆகக் குறைந்தது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அடைந்துகொள்வதற்கு வெளி நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புக்களின் உதவியுடன் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டன. | நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையை நோக்கி கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | (i) | நியமம் 7 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் பரிமாற்றமின்றிய கொடுக்கல் வாங்கல் ஊடாக சொத்தொன்று பெறப்படும் போது அதன் கிரயம் கொள்வனவுத் திகதியிலுள்ளவாறான அதன் முகப்பெறுமதியில் அளவிடப்பட வேண்டும். எனினும் 2017 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியின் போது பெறப்பட்டு 04 சிறைச்சாலை நிறுவனங்களிலுள்ள அன்பளிப்புச் செய்யப்பட்ட 25 சொத்து உருப்படிகள் மற்றும் 04 சிறைச்சாலை நிறுவனங்களிலுள்ள அன்பளிப்புச் செய்யப்பட்ட 528 சொத்து உருப்படிகள் என்பவற்றின் முகப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. ஒதுக்கீட்டு கணக்கின் ஊடாக சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் அனைத்தையும் சமர்ப்பிக்கும் செயன்முறையின் கீழ் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட சொத்துக்கள் அனைத்தினதும் கிரயத்தை கணிப்பீடு செய்து தொடர்ந்துவரும் ஆண்டின் ஒதுக்கீட்டு கணக்கு மூலம் அவற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது கணக்காய்விற்கு அறிவிக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) | குறித்த நியமத்தின் 70 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலத்தை தீர்மானிக்கும் போது சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட பாவனை மற்றும் சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட இயலளவு என்பன கருத்தில் கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்துக்களின் | சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்திற்கு அன்பளிப்பாக பெறப்பட்ட சொத்துக்கள் சிறைக்கைதிகளின் பயன்பாட்டிற்காக பெறப்பட்ட சொத்துக்களாகும். அச் சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாடு, சொத்துக்கள் அன்பளிப்பு செய்யப்படுவதற்கான நோக்கங்களின் தன்மை மற்றும் சொத்தின் இருக்கும் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பயன்தரு ஆயுட்காலத்தை தீர்மானிப்பதன் மூலம் பெறுமானத் தேய்வு வீதத்தை தீர்மானிப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 2,555,334 கிரயமான அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்துக்கள் 2003 ஆம் ஆண்டில் குழுவொன்றால் தீர்மானிக்கப்பட்ட பெறுமானத்தேய்வு வீதத்தை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. | தன்மை என்பவற்றை கருத்தில் கொண்டு பெறுமானத்தேய்வு வீதம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்விற்காக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் 2003 ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்ட குழுவொன்றின் மூலம் தீர்மானிக்கப்பட்ட பெறுமானத்தேய்வு வீதங்களாக அவை காணப்படுகின்றன. |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அன்பளிப்புக்களாக பெறப்பட்ட சொத்துக்களின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்காக கணக்கீட்டு கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதனால் அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,030,844 ஆக காணப்பட்டது. எனினும் அத்திகதியிலுள்ளவாறான அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்து ஒதுக்க கணக்கின் மீதி ரூபா 23,507,728 ஆக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. | அன்பளிப்புக்களாக பெறப்பட்ட சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு அச் சொத்துக்களின் பெறுமதியை மூலதனமாக்குவதற்காக கட்டணமின்றிய சொத்து அன்பளிப்பு ஒதுக்க கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2019.12.31 இல் உள்ளவாறான அக் கணக்கின் மீதி ரூபா 23,507,729 ஆக காணப்பட்டது. இம் மூலதனமாக்கப்பட்ட அன்பளிப்புச் செய்யப்பட்ட சொத்து உருப்படிகளை பயன்படுத்தும் போது ஒவ்வொரு ஆண்டும் வருமானச் செலவினக் கணக்கிற்கு எதிராக வருடாந்த பெறுமானத்தேய்வுகள் பதிவளிக்கப்பட்டிருந்தன. இதனால் சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் அன்பளிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகை பெறுமானத்தேய்விற்கு சமமான தொகையொன்றை கழிப்பதன் மூலம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | இனங்காணப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் அன்பளிப்புச் செய்யப்பட்ட சொத்துக்கள் சரியாக கணக்கிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறைச்சாலை நிறுவனங்களிற்கு அன்பளிப்புக்களாக கிடைத்த நுகரத்தக்க பொருட்களை கணக்கீடு செய்வதற்காக கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்காததால் 10 சிறைச்சாலை நிறுவனங்களிற்கு கிடைத்த நுகரத்தக்க பொருட்களின் ரூபா 997,300 பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நுகரத்தக்க பொருட்களின் பெறுவனவு பெறுமதியை கணிப்பீடு செய்வதற்கு அல்லது மிகுதி 20 சிறைச்சாலைகளின் நிதிக்கூற்றுக்களில் அவற்றை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அன்பளிப்புக்களாக கிடைத்த நுகரத்தக்க பொருட்கள் சிறைக்கைதிகளின் பயன்பாட்டிற்காக அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்களாக காணப்படுகின்றதுடன் அவர்களின் பயன்பாட்டிற்காக அப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அப் பொருட்கள் முடிவடையும் போது அவை இருப்புக்களாக இறுதிக் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் இறுதிக் கணக்கின் கணக்கீட்டு நடவடிக்கைகள் நியமம் 16 இன் பிரகாரம் 2019.12.31 இல் உள்ளவாறான வெளிப்படுத்தல்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | அன்பளிப்புக்களாக பெறப்பட்ட நுகரத்தக்க பொருட்களின் பெறுமதி இனங்காணப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையொன்றின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | போகம்பர சிறைச்சாலையை தும்பர சிறைச்சாலைக்கு இடம்மாற்றியதன் பின்னர் காணாமல்போன மற்றும் கொழும்பு றிமான்ட் சிறைச்சாலையில் காணாமல்போன முறையே ரூபா 181,365 மற்றும் ரூபா 46,500 பெறுமதியான அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்துக்களை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. மேலும் புத்தகங்களிலிருந்து பௌதீக ரீதியாக காணப்படாத பொருட்களை அகற்றுவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் சிறைச்சாலை அத்தியட்சகர்களிற்கு வழங்கப்படும் என்பதும் முறையான குழுவொன்றை நியமனம் செய்வதன் மூலம் புத்தகங்களிலிருந்து இச் சொத்துக்களை அகற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் குறித்துக் கொள்ளப்படுகின்றது. | நிதிப்பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 1998 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியின் போது அன்பளிப்புக்களாக புதிய மகசின் சிறைச்சாலைக்கு பெறப்பட்டு 2012 ஆம் ஆண்டில் தீ | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. 2012.01.24 இல் மகசின் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தின் போது ஏற்பட்ட தீயினால் அழிவடைந்த பொருட்களை பதிவழிப்பதற்கான | அழிவடைந்த சொத்துக்கள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட வேண்டியதுடன் சரியான முறையில் |

| | | |
|---|---|---|
| காரணமாக அழிவடைந்த ரூபா 668,431 கிரயமான 41 அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்துக்களை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2011 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியின் போது அன்பளிப்புக்களாக பெறப்பட்ட ரூபா 895,244 கிரயமான 59 அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்துக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத போதிலும் கழிவுப்பொருளாக (Scrap) பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இதனால் தீ காரணமாக அழிவடைந்த பொருட்களிற்காகவும் கழிவுப்பொருளிற்காகவும் மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 55,830 தொகை சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தன. எனினும் தற்போது வரை அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இதனால் அவ் அழிக்கப்பட்ட சொத்துக்கள் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட முடியாதிருந்ததுடன் இதன் விளைவாக அச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு வருடாந்தம் கணிப்பீடு செய்யப்பட்டு இறுதிக் கணக்குகளிற்கு சீராக்கம் செய்வதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன. மேலும் புத்தகங்களிலிருந்து அச் சொத்துக்களை பதிவழிப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் திருத்தம் செய்யப்பட வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 16 சிறைச்சாலை நிறுவனங்களின் அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்துக்கள் பதிவேட்டில் 1997 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறைவடைந்த பெறுமதியாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 2,220,016 கிரயமான அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்துக்களிற்குரிய பட்டியலொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு பதிவேட்டில் 1997 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதியாக சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 2,220,216 தொகையான அன்பளிப்பு செய்யப்பட்ட சொத்துக்களின் மீதிகள் மாத்திரமே பதிவேட்டில் மீதியொன்றாக முன்கொண்டு வரப்பட்டிருந்ததால் இது அவ்வாறே பேணப்படுகின்றது. | முன்கொண்டுவரப்பட்ட சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு மற்றும் அவை தொடர்பான பட்டியல்கள் சமாப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 1979 இன் 54 ஆம் இலக்க சிறைக்கைதிகளின் நலன்புரி நிதிய (திருத்திய) அதிகாரச்சட்டம் | | | |
| (i) பிரிவு (அஅ) | ஒரு ஆண்டிற்கு குறையாத காலப்பகுதியொன்றில் உரிமை கோரப்படாது காணப்பட்ட ரூபா 4,228,197 தொகையான வேதனங்கள் மற்றும் தனியார் பணம் என்பன நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் காணப்பட்டன. | உரிய நிறுவனங்களால் உரிமை கோரப்படாத பணத்திற்குரிய வயதுப் பகுப்பாய்வு தொடர்பான அறிக்கையொன்றை வரவழைப்பதற்காக சிறைச்சாலை அத்தியட்சகர்களிற்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்திற்கு அவற்றை செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | சிறைக்கைதிகளின் நலன்புரி நிதிய அதிகாரச்சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) பிரிவு 04 | மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் வருமானம் ரூபா 767,912 ஆக காணப்பட்டதுடன் வருமானத்தை அதிகரிப்பதற்காக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிற்காக 10 வருமான மூலங்களின் கீழ் வருமானத்தை சேகரிப்பதற்கான முறைமையொன்றை இனங்கண்டு அமுல்ப்படுத்துவதற்கு முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சிறைக்கைதிகளின் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட வருமான மூலங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதன் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக சிறைச்சாலை ஆணையாளரிற்கு (புனரமைப்பு) அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக குறித்துக் கொள்ளப்படுகின்றது. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 | வெலிக்கட மகசின் சிறைச்சாலை மற்றும் அனுராதபுர சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ளக கலவரங்களின் போது சேதமடைந்த அன்பளிப்புச் செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் 2004 திசெம்பர் 26 இல் காலி சிறைச்சாலையில் சுனாமி அனர்த்தம் காரணமாக அழிவடைந்த சொத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவற்றிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் மூலம் ஆவணங்களை அனுப்புமாறு உரிய சிறைச்சாலை அத்தியட்சகர்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் மகசின் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தின் போது ஏற்பட்ட நட்டத்தை பதிவழிப்பதற்கு அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாண ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 1,359,184 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 281,121 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 1,640,305 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதியத்தின் வருமானம் ரூபா 1,147,589 ஆல் குறைவடைந்தமை மற்றும் செலவினம் ரூபா 492,717 ஆல் அதிகரித்தமை என்பன இப் பற்றாக்குறைக்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ரூபா 768,031 பெறுவனவுகள் உள்ளடங்கிய நிதியத்தின் மீதி ரூபா 3,604,646 ஆக காணப்பட்ட போதிலும் அதில் 20 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 721,015 மாத்திரமே அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் வகிபங்காக உள்ள சிறைக்கைதிகளுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ஒட்டுமொத்த வருமானத்தில் ரூபா 617,565 | 2018.01.01 இல் உள்ளவாறான சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் மீதி ரூபா 921,329 ஆக காணப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 2018 யூன் அளவில் அதன் மீதி ரூபா 1,276,863 ஆக காணப்பட்டது. அம் மீதி கருத்தில் கொள்ளப்பட்டு 2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டதால் ரூபா 1,000,000 பெறுமதிக்காக மாத்திரமே செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அம் மதிப்பிடப்பட்ட செலவினத்தில் 72 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட வருமான மூலத்தின் பிரகாரம் நிதிகளை சேகரிப்பதற்கும் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை அல்லது 83 சதவீதம் 06 சிறைச்சாலை நிறுவனங்களிலுள்ள சிறைக்கைதி தொழிலாளரிடமிருந்து பெறப்பட்ட வருமானமாக காணப்பட்டது. | ரூபா 721,015 தொகை சிறைக்கைதிகளின் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக செலவிடப்பட்டிருந்தன. மொத்த வருமானத்தில் 83 சதவீதமான பெரிய சதவீதம் சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் பிரதான வருமான மூலமாகவுள்ள சிறைக்கைதி தொழிலாளரிடமிருந்து பெறப்பட்ட வருமானத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் மிகுதி 17 சதவீதம் 05 ஏனைய மூலங்களிலிருந்தான வருமானத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதற்கிணங்க சிறைக்கைதிகளின் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட வருமான மூலத்தின் மீது விசேட கவனம் செலுத்துவதன் மூலம் நிதியத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக சிறைச்சாலை ஆணையாளரிற்கு (புனரமைப்பு) அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக குறித்துக்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | முன்னைய ஆண்டில் சிறைக்கைதிகளின் சார்பில் எந்தவொரு நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டிருக்காததுடன் 2017 ஆம் ஆண்டை உள்ளடக்கி முன்னைய 05 ஆண்டுகளின் போது நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,515,269 தொகையான சராசரி செலவினத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அதற்காக ஏற்பட்ட செலவினம் ஏறத்தாழ 71 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காததால் அவ் ஆண்டிற்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக செலவினம் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மதிப்பிடப்பட்ட செலவினத்தில் 72 சதவீதம் மீளாய்வாண்டிற்காக ஏற்பட்டிருந்தது. | நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் போதுமானளவில் நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | நிதியத்தின் செயலாற்றலை அளவிடுவதற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காததுடன் சிறைச்சாலை நிறுவனங்களில் நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் தன்மை, அதில் பங்குபற்ற | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படுகின்றதுடன் நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை, அதில் பங்குபற்ற | நிதியத்தின் செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய சிறைக்கைதிகள்/ சந்தேகநபர்களின் எண்ணிக்கை, மேற்கொள்ள வேண்டிய கிரயத்தை சுட்டிக்காட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான முன் திட்டம் மற்றும் குறித்த திட்டத்தின் பிரகாரம் செயன்முன்னேற்றம் என்பன அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. இதனால் நிதியத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளை ஒப்பீடுசெய்வதன் மூலம் மதிப்பீடு செய்யப்பட முடியாதிருந்தது. | வேண்டிய கைதிகளின் (சிறைக்கைதிகள்/ சந்தேகநபர்கள்) எண்ணிக்கை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செலவினம் போன்ற விபரங்கள் அதில் உள்ளடக்கப்படுகின்றதுடன் அதற்கிணங்க அந் நிகழ்ச்சித்திட்டங்களிற்காக நிதியேற்பாடுகள் மற்றும் நிதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிதியத்தின் மேலதிக செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்காக செயலாற்றல் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துவதற்கு சிறைச்சாலை ஆணையாளரிற்கு (புனரமைப்பு) அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக குறித்துக்கொள்ளப்படுகின்றது. | |
| (ஈ) | மட்டக்களப்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளால் மீளாய்வாண்டின் போது சிறைக்கைதிகளின் சார்பில் எந்தவொரு நலன்புரி நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மட்டக்களப்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளில் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் தன்னார்வ நிறுவனங்கள், சிறைக்கைதிகளின் நலன்புரி உப சங்கங்கள், வெளி நிறுவனங்கள் மற்றும் நபர்களின் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்டு நிதியத்திற்குரிய சிறைக்கைதிகளிற்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டிருந்தன. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (உ) | தீவு முழுவதும் அமைந்துள்ள 30 சிறைச்சாலை நிறுவனங்களில் 04 இல் சிறைக்கைதிகளின் ஆன்மீக மற்றும் சமய நலன்களிற்காக எந்தவொரு நிகழ்ச்சித்திட்டத்தையும் நிதியம் நடாத்தியிருக்கவில்லை. மேலும் 10 சிறைச்சாலை நிறுவனங்களால் சிறைக்கைதிகளின் கல்வி நலன் தொடர்பான | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களின் சார்பிலும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் குறித்த சில நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொரு சிறைச்சாலை | நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்கள், 09 சிறைச்சாலை நிறுவனங்களால் சிறைக்கைதிகளிற்கு பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 14 சிறைச்சாலை நிறுவனங்களால் சிறைக்கைதிகளிற்கு வெகுமதி வழங்குவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் நிதியத்தின் ஊடாக நடாத்தப்பட்டிருந்தன. மேலும் அவர்களது புனர்வாழ்வின் போது உதவுவதற்காக விடுவிக்கப்பட்ட பின்னரான உதவி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக வீரவில சிறைச்சாலையால் ரூபா 5,000 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததால் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களிற்கும் உரிய சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் பிராந்திய குழுக்கள் மற்றும் அரசாங்க/ அரசசார்பற்ற நிறுவனங்களால் அனுசரணையளிக்கப்படுகின்றதால் குறித்த சில நிகழ்ச்சித்திட்டங்களிற்காக செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 26 இன் பிஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களிற்கிணங்க திறைசேரியால் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு செப்தெம்பர் 30 இற்கு முன்னர் உரிய அங்கீகாரங்களுடன் தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச நிதி பணிப்பாளர் நாயகம் ஆகியோரிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளிற்கிடையேயான முரண்கள் தொடர்பான கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு முறையாக தயாரிக்கப்பட்டிருந்தது. | அரச நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |